பொருளடக்கம்

❄

1 அல்லாஹ்வின்மீது நம்பிக்கை 7
2 வானவர்கள்மீது நம்பிக்கை 21
3 அல்லாஹ்வின் வேதங்கள்மீது நம்பிக்கை 28
4 அல்லாஹ்வின் தூதர்கள்மீது நம்பிக்கை 34
5 மறுவுலகம்மீது நம்பிக்கை 40
6 விதியின்மீது நம்பிக்கை 52
7 ஈமான் என்பதின் விளக்கம் 59
8 ஷஹாதா (ஏகத்துவ உறுதிமொழி) 68
9 இஸ்லாமியக் கோட்பாடுகள் 91
10 தவ்ஹீது ஓர் அறிமுகம் 98
11 தவ்ஹீது கோட்பாடு 121
12 லா இலாஹ இல்லல்லாஹ் 130
13 அல்லாஹ் யார்? 140
14 இஸ்லாமின் அடிப்படை ஆதாரங்கள் 163
15 இஸ்லாமின் மூன்று அடிப்படைகள் 168
16 அல்லாஹ்வின் உரிமைகள் 177
17 அல்லாஹ்வின் பெயர்கள் பண்புகள் 182
18 இஸ்லாம் கூறும் வானவர்கள் 192
19 இஸ்லாம் கூறும் தனித்துவமான மறுமை நம்பிக்கை 202
20 இஸ்லாமை முறிக்கக்கூடியவை 208
21 படைப்பாளன் இன்றி படைப்புகள் இல்லை 214
22 அல்லாஹ்வின் கருணை 220
23 மரணத்திற்குப் பின் 229
24 இயேசு எனப்படும் இறைத்தூதர் ஈசா 239

25 இயேசு இறந்தவர்களுக்கு உயிர்கொடுத்தாரே?
முஹம்மது அப்படிப்பட்ட அற்புதத்தைச் செய்யவில்லையே?
இவர்களில் யார் மகத்தானவர்? 247

26 சோதிடம் 253

27 தாயத்து 256

28 குறி பார்த்தல், சோதிடம் குறித்து இஸ்லாம் 260

29 கண்ணேறு 264

30 பிரார்த்தனை ஒரு விளக்கம் 273

31 பாவமன்னிப்பு (தவ்பா) 289

32 இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடு 298

33 அல்லாஹ்வின் வழிபாட்டில் அன்பு, அச்சம், ஆதரவு 302

34 குர்ஆன் பாதுகாக்கப்பட்ட வரலாறு 309

35 ஹதீஸ் (நபிவழிச் செய்தி) ஓர் அறிமுகம் 317

36 குர்ஆனில் பெருவெடிப்புக் கொள்கை 321

37 அன்னை ஆயிஷாவுடன் நபியவர்களின் திருமணம்
ஓர் ஆய்வு 324

38 இஸ்லாம் கூறும் திருமணம் 347

39 அகீகா எனும் அறுத்துப் பலியிடல் 351

40 இறுதிச்சடங்குகள் 356

41 கடன் ஓர் இஸ்லாமியப் பார்வை 365

42 வட்டி ஒரு வன்கொடுமை 372

1

அல்லாஹ்வின்மீது நம்பிக்கை

❄

இஸ்லாமிய மார்க்கத்தில்அகீதா என்றால் அல்லாஹ்வின் மீதும், அவனுடைய வானவர்கள், வேதங்கள், தூதர்கள், மறுமைநாள் மற்றும் விதியின் நன்மை தீமை ஆகிய விசயங்களின்மீது நம்பிக்கை வைப்பதைக் குறிப்பிடும். இவையே ஈமான் எனும் நம்பிக்கையின் ஆறு தூண்கள்.

அகீதா என்பது தவ்கீஃபிய்யா ஆகும். அதாவது, இஸ்லாமிய மார்க்கத்தின் மூல ஆதாரங்களான குர்ஆனிலிருந்தும் நபிவழியிலிருந்தும் ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டே நிரூபிக்க வேண்டும். அகீதாவானது இவ்விரண்டு ஆதாரங்களுக்கும் கட்டுப்பட்டதாகும். இவற்றைத் தாண்டி எதுவும் அகீதாவில் எடுக்கப்படாது என்பதே தவ்கீஃபிய்யா என்பதின் பொருளாகும்.

அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வைப்பதே ஈமானின் முதல் தூணாகும். இஸ்லாமிய நம்பிக்கைகளுடைய மையக்கருவே அல்லாஹ்வின் மீதான நம்பிக்கைதான். ஒருவர் இந்நம்பிக்கையை ஏற்றுக்கொள்ள 'லா இலாஹ இல்லல்லாஹ்' (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை) என்று உறுதிமொழி கூற வேண்டும். இதற்குப் பெயர்தான் அறபுமொழியில் தவ்ஹீது என்பார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

وَإِلَٰهُكُمْ إِلَٰهٌ وَاحِدٌ لَا إِلَٰهَ إِلَّا هُوَ الرَّحْمَٰنُ الرَّحِيمُ

உங்கள் வணக்கத்திற்குத் தகுதியானவன் ஒரேயொரு இறைவனே ஆவான். அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை. (குர்ஆன் 2:163)

அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை: இந்த நம்பிக்கை (ஈமான்) நான்கு விசயங்களை உள்ளடக்கியதாகும்.

4

அல்லாஹ்வின் தூதர்கள்மீது நம்பிக்கை

❄

அல்லாஹ்வின் தூதர்கள்மீது நம்பிக்கைகொள்வது என்பது இஸ்லாமிய மார்க்கத்தில் இறைநம்பிக்கையின் ஆறு தூண்களில் ஒன்றாகும். அல்லாஹ் தன்னுடைய தூதர்களாக மனிதர்களில் மிகச் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் மூலம் தனது படைப்புகளுக்கு, அதாவது மனிதர்களுக்கு நேர்வழி காட்டுகிறான் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சட்டங்களை அவன் வழங்கி அவற்றின் அடிப்படையில் அவனை வணங்குமாறும், அவனுக்குக் கீழ்ப்படியுமாறும் ஏவியுள்ளான். இதன் மூலமாக அவனுடைய மார்க்கத்தையும் ஏகத்துவத்தையும் நிலைநிறுத்துகிறான். இச்செய்தியை அவனுடைய தூதர்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும், தங்களுக்கு எந்த வழிகாட்டலும் வரவில்லை என்று அவர்கள் அல்லாஹ்வைக் குறைகூறக் கூடாது என்பதற்காக ஆதாரத்தையும் அவன் இப்படி நிலைநாட்டுகிறான்.

இறைத்தூதர்கள்தாம் அல்லாஹ்வின் திருப்தியை அடைவதற்கும் அவனுடைய சொர்க்கத்தைப் பெறுவதற்கும் நற்செய்தியை அறிவிப்பவர்கள். தங்களை நம்பிக்கைகொண்டு தங்களின் போதனைகளைப் பின்பற்றும் மக்களுக்கு அவர்கள் இந்த நற்செய்தியை அறிவிப்பார்கள். அதே சமயம், அவர்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் அனுப்பப்பட்டுள்ளார்கள். அவர்களின் போதனைகளை நிராகரித்து அவர்களை நம்பிக்கை கொள்ள மறுத்த மக்களுக்கு அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தைக்கொண்டும் தண்டனையைக்கொண்டும் எச்சரிக்கை செய்வார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا نُرْسِلُ الْمُرْسَلِينَ إِلَّا مُبَشِّرِينَ وَمُنْذِرِينَ فَمَنْ آمَنَ وَأَصْلَحَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ وَالَّذِينَ كَذَّبُوا بِآيَاتِنَا يَمَسُّهُمُ الْعَذَابُ بِمَا كَانُوا يَفْسُقُونَ

(நன்மையைக் கொண்டு) நற்செய்தி கூறுபவர்களாகவும், (தீமையைப் பற்றி) அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவுமே தவிர (நம்முடைய) தூதர்களை நாம் அனுப்பவில்லை. ஆகவே, எவர்கள் உண்மையாகவே அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டு, (தங்களைச்) சீர்திருத்திக்கொண்டார்களோ அவர்களுக்கு எந்தப் பயமுமில்லை; அவர்கள் கவலைப்படவும்மாட்டார்கள். ஆனால், (உங்களில்) எவர்கள் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகிறார்களோ அவர்களை, அவர்களுடைய (இப்)பாவத்தின் காரணமாக வேதனை பிடித்துக்கொள்ளும். (குர்ஆன் 6:48,49)

இறைத்தூதர்கள் பலர் அனுப்பப்பட்டுள்ளனர்.

وَلَقَدْ أَرْسَلْنَا رُسُلًا مِنْ قَبْلِكَ مِنْهُمْ مَنْ قَصَصْنَا عَلَيْكَ وَمِنْهُمْ مَنْ لَمْ نَقْصُصْ عَلَيْكَ

(நபியே!) நிச்சயமாக நாம் உமக்கு முன்னர் தூதர்கள் பலரை அனுப்பியிருக்கின்றோம். அவர்களில் சிலருடைய வரலாற்றையே நாம் உமக்குக் கூறியிருக்கின்றோம். அவர்களில் பலருடைய வரலாற்றை நாம் உமக்குக் கூறவில்லை. (குர்ஆன் 40:78)

இறைத்தூதர்கள் அனைவர்மீதும் நம்பிக்கைகொள்ள வேண்டும். அவர்கள் மனித இனத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் அபார சக்திகொண்ட படைப்பு அல்ல. அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا قَبْلَكَ إِلَّا رِجَالًا نُوحِي إِلَيْهِمْ فَاسْأَلُوا أَهْلَ الذِّكْرِ إِنْ كُنْتُمْ لَا تَعْلَمُونَ وَمَا جَعَلْنَاهُمْ جَسَدًا لَا يَأْكُلُونَ الطَّعَامَ وَمَا كَانُوا خَالِدِينَ

(நபியே!) உமக்கு முன்னரும் (மனிதர்களில்) ஆண்களையே தவிர வேறு எவரையும் நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை. (உமக்கு அறிவிப்பது போன்றே நம்முடைய கட்டளைகளை) அவர்களுக்கும் 'வஹ்யி' (மூலம்) அறிவித்தோம். ஆகவே, (இவர்களை நோக்கி நீர் கூறும்: 'இது) உங்களுக்குத் தெரியாதிருந்தால் முன்னுள்ள வேதமுடையோரிடம் கேட்டு (அறிந்து) கொள்ளுங்கள்.' இன்னும், அவர்களுக்கு நாம் உணவே உட்கொள்ளாத உடலைக் கொடுக்கவில்லை. மேலும், அவர்கள் (பூமியில் என்றுமே மரணிக்காத) நிரந்தரம் பெற்றவர்களாகவும் இருக்கவில்லை. (குர்ஆன் 21:7,8)

அல்லாஹ்வின் தன்மைகளுக்கு ஒப்பான எந்தத் தன்மைகளும் அவர்களுக்கு இல்லை. தாங்களாக எந்த நன்மையோ தீமையோ அவர்கள் செய்துகொள்ள முடியாது. பிரபஞ்ச இயக்கத்தின்மீது

8

ஷஹாதா [ஏகத்துவ உறுதிமொழி]

❄

ஷஹாதா ஒரு விளக்கம்

ஷஹாதா எனும் அறபுச்சொல்லுக்கு சாட்சி சொல்லுதல் அல்லது உறுதிமொழி அளித்தல் என்று பொருள். இஸ்லாமிய வழக்கில் ஒருவர் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் யாருமில்லை என்றும் முஹம்மது ﷺ அவர்கள் மனிதகுலம் முழுமைக்குமான இறைத்தூதர் என்றும் சாட்சி கூறுவதை இச் சொல் குறிப்பிடும். இந்தக் குறிப்பிட்ட வாக்குறுதியை மொழிவது இஸ்லாமிய அடிப்படைகளில் ஒன்றாகும். இதுதான் இஸ்லாமிய நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் அனைத்திற்கும் அடிப் படையாகும். ஷஹாதா என்பது இரண்டு பகுதிகளைக் கொண்ட தாகும். ஒன்று, கலிமா தவ்ஹீது எனப்படும் ஏகத்துவ உறுதி மொழியைக் கொண்டது. மற்றொன்று, கலிமா ரிசாலத் எனும் முஹம்மது நபியவர்களின் நபித்துவத்தை ஏற்று உறுதிமொழி வழங்குவது.

ஷஹாதாவின் வார்த்தைகள்

புகாரீயின் நபிமொழியில் இஸ்லாமின் ஐந்து தூண்களில் முதல் தூணாக கலிமா ஷஹாதா குறிப்பிடப்பட்டுள்ளது. ஷஹாதாவில் இரண்டு பகுதிகள் உள்ளதால், அதனை ஷஹாதத்தைன் (இரண்டு உறுதிமொழிகள்) என்றும் குறிப்பிடுவதுண்டு. ஷஹாதாவை அறபியில் விரித்துச் சொல்லும்போது, 'அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ், வ அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்' என்று கூறுவர். இதன் பொருள்: 'அல்லாஹ்வைத் தவிர வணக்கத் திற்குரிய இறைவன் யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். மேலும், முஹம்மது அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.' இஸ்லாமிய மார்க்கத்தில் நுழைய

விரும்பும் முஸ்லிமல்லாதவர்கள் இந்த வாசகத்தைக் கூறியே நுழைய வேண்டும்.

இஸ்லாமில் ஷஹாதாவின் முக்கியத்துவம்

நிச்சயமாக லா இலாஹ இல்லல்லாஹ் எனும் வாசகத்தைவிட மகத்தான, முக்கியமான ஒரு வாசகம் எதுவுமில்லை.

அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நம்பிக்கை கொண்டு பிரகடனம் செய்கிற இந்த வாக்கியம்தான் ஈமானையும் (இறைநம்பிக்கையையும்) கும்ப்ரையும் (இறைமறுப்பையும்) பிரித்துக்காட்டுவதாக இருக்கிறது. இதன் பக்கமே எல்லா இறைத்தூதர்களும் அழைப்பு விடுத்தார்கள். இதன் முக்கியத்தை உணர்த்தும் விதத்தில்,

فَاعْلَمْ أَنَّهُ لَا إِلَهَ إِلَّا اللَّهُ

'அறிந்துகொள்ளுங்கள், வணக்கத்திற்குத் தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை' *(47:19, 20:8, 3:18, 59:22-3)*

என்று அல்லாஹ்வும் குர்ஆனின் பல இடங்களில் குறிப்பிடுகிறான்.

ஓர் இறைமறுப்பாளர் (காஃபிர்) இந்த வாக்கியத்தைக் கூறிய பிறகே முஸ்லிமாக முடியும். அவர் கூறுவது கட்டாயமாக இருக்கிறது. அதன் பிறகே அவருடைய செல்வமும் உயிரும் இவ்வுலகில் பாதுகாப்பு பெறுகிறது. எந்த முஸ்லிமாக இருந்தாலும் அவர் இவ்வாக்கியத்தின் பொருளையும், சிறப்புகள், அடிப்படைகள், நிபந்தனைகள், வாழ்க்கையில் அதற்கு இருக்கும் இடம் ஆகிய வற்றையும் புரிந்துகொள்வது கடமையாகும். அல்லாஹ்வை நினைவுகூர்வது அல்லாஹ்வின் கட்டளைகளில் மிக முக்கியமானதாகும். இதை அவனே குர்ஆனின் பல வசனங்களில், குறிப்பாக மிக முக்கியமான கடமைகளைக் குறிப்பிடும்போது தெளிவுபடுத்தியுள்ளான்.

فَإِذَا أَفَضْتُمْ مِنْ عَرَفَاتٍ فَاذْكُرُوا اللَّهَ عِنْدَ الْمَشْعَرِ الْحَرَامِ وَاذْكُرُوهُ كَمَا هَدَاكُمْ

(ஹஜ்ஜுக்குச் சென்ற) நீங்கள் அரஃபாவிலிருந்து திரும்பினால் அல்மஷ்அருல் ஹராம் என்னும் (முஸ்தலிஃபா) இடத்தில் அல்லாஹ்வை நினைவுகூருங்கள். உங்களுக்கு அவன் நேரான வழியை அறிவித்ததற்காகவும் அவனை நினைவுகூருங்கள். *(குர்ஆன் 2:198)*

فَإِذَا قَضَيْتُمْ مَنَاسِكَكُمْ فَاذْكُرُوا اللَّهَ كَذِكْرِكُمْ آبَاءَكُمْ أَوْ أَشَدَّ ذِكْرًا

10

தவ்ஹீது ஓர் அறிமுகம்

❄

தவ்ஹீது என்பது ஒரு பெயர்ச்சொல். வஹ்ஹத, யுவஹ்ஹிது எனும் வேர்ச்சொல்லிலிருந்து பிறக்கிறது. இதன் பொருள், ஒன்றை அது ஒன்றாகவே உள்ளது என்பதாகும். இது மறுத்தல், உறுதிப்படுத்தல் இல்லாமல் ஏற்படாது. அதாவது, மறுக்கும்போது அந்தப் பொருளைத் தவிர உள்ள அனைத்தையும் மறுக்க வேண்டும். அதன் மூலம் அப்பொருளை அது ஒன்றுதான் என்று உறுதிப்படுத்த வேண்டும்.

மொழிரீதியான பொருள்

மொழிரீதியாக தவ்ஹீது என்பது வஹ்ஹத எனும் சொல்லிலிருந்து வருகிறது. எதையேனும் ஒன்றை அது ஒன்றாகவே உள்ளது என்று இதற்குப் பொருள். வாஹிது (ஒன்று) என்பது இரண்டு, மூன்று மற்றும் பலவற்றுக்கு எதிரானது. பன்மைக்கு எதிர்ப்பதமாக தவ்ஹீது எனும் பதம் உள்ளது. வாஹிது (ஒன்று) என்பது கடைசி வரை ஒன்றாகவே இருக்கும். அது எந்தக் கட்டத்திலும் இன்னொன்றுக்கு இணையாக ஆகிவிடாது.

மார்க்கரீதியான பொருள்

இஸ்லாமிய வழக்கில் அதாவது ஷரீஆ சட்டப்படி தவ்ஹீது என்றால் அல்லாஹ்வை அனைத்து வகையான வணக்கங்களைக் கொண்டு ஒருமைப்படுத்துவதாகும். இதன் மூலம் அல்லாஹ்வையே நீங்கள் வணங்க வேண்டும் என்ற கருத்து அமைகிறது. அல்லாஹ் கூறுகிறான்:

وَيَكُونَ الدِّينُ كُلُّهُ لِلَّهِ

அல்லாஹ்வுடைய மார்க்கம் நிலைபெறும் வரை... (குர்ஆன் 8:39)

இபாதத்தின் இரண்டு நிபந்தனைகள்

- மனத்தூய்மையாக அல்லாஹ்வின் திருப்திக்காகச் செய்தல்
- நபிவழிப்படி செய்தல்

நபியவர்கள் கூறினார்கள்: யார் நமது கட்டளையில்லாமல் ஒரு விசயத்தை நமது மார்க்கத்தில் செய்கிறார்களோ, அது நிராகரிக்கப் படும். (புகாரீ)

அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, அவனது தண்டனைகள் குறித்து அச்சமில்லாமல் இருப்பது, அவனது கருணையின்மீது நம்பிக்கை இழப்பது, அவனது உதவி குறித்து நிராசை அடைவது ஆகியவை பாவங்களில் மிகப் பெரியவையாகும்.

குர்ஆனிலிருந்து சில ஆதாரங்கள்

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம். (குர்ஆன் 1:4)

فَمَنْ كَانَ يَرْجُو لِقَاءَ رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا

ஆகவே, எவர் தம் இறைவனைச் சந்திக்க ஆதரவு வைக்கி றாரோ அவர் நற்செயல்களைச் செய்து தம் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது (அவனையே) வணங்கிவரு வாராக! (18:110)

وَقَالَ رَبُّكُمُ ادْعُونِي أَسْتَجِبْ لَكُمْ إِنَّ الَّذِينَ يَسْتَكْبِرُونَ عَنْ عِبَادَتِي سَيَدْخُلُونَ جَهَنَّمَ دَاخِرِينَ

உங்கள் இறைவன் கூறுகின்றான்: 'நீங்கள் (உங்களுக்கு வேண்டி யவை அனைத்தையும்) என்னிடமே கேளுங்கள். நான் உங்க ளுடைய பிரார்த்தனையை அங்கீகரித்துக்கொள்வேன். எவர்கள் என்னை வணங்காமல் பெருமையடிக்கின்றார்களோ, அவர்கள் நிச்சயமாக இழிவடைந்தவர்களாக நரகம் புகுவார்கள். (40:60)

وَأَنَّ الْمَسَاجِدَ لِلَّهِ فَلَا تَدْعُوا مَعَ اللَّهِ أَحَدًا

நிச்சயமாக மஸ்ஜிதுகளெல்லாம், அல்லாஹ்வை வணங்கு வதற்காக உள்ளன. ஆகவே, (அவற்றில்) அல்லாஹ்வுடன் மற்றெவரையும் (பெயர் கூறி) அழைக்காதீர்கள். (குர்ஆன் 72:18)

16

அல்லாஹ்வின் உரிமைகள்

❄

அல்லாஹ் தன் படைப்புகள்மீது கொண்டுள்ள உரிமைகள்தாம் உரிமைகள் அனைத்திலும் மிகவும் முக்கியமானவை. பிரபஞ்சம் முழுவதையும் படைத்து வளர்ப்பவன் அவனே. ஒவ்வொன்றும் அவனது ஞானத்தின் அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளன. அனைத்தையுமே அவன் ஒன்றுமில்லாமையிலிருந்து படைத்துள்ளான். அவன்தான் மனிதர்களை அவர்கள் தம் தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதும், பிறகு சிசுவாக, குழந்தையாக, பருவமடைந்தவர்களாக ஆகும்போதும் பாதுகாக்கிறான். அவனே எல்லா உயிரினங்களுக்கும் மனிதர்களுக்கும் வாழ்வாதாரத்தை வழங்குகிறான். அல்லாஹ் கூறுகிறான்:

وَاللَّهُ أَخْرَجَكُمْ مِنْ بُطُونِ أُمَّهَاتِكُمْ لَا تَعْلَمُونَ شَيْئًا وَجَعَلَ لَكُمُ السَّمْعَ وَالْأَبْصَارَ وَالْأَفْئِدَةَ لَعَلَّكُمْ تَشْكُرُونَ

> ஒன்றையுமே நீங்கள் அறியாதவர்களாக இருந்த நிலைமையில், உங்களின் தாய்மார்களுடைய வயிறுகளிலிருந்து அல்லாஹ் தான் உங்களை வெளிப்படுத்தினான். மேலும், உங்களுக்குச் செவிப்புலனையும் கண்களையும் இதயங்களையும் கொடுத்தவனும் அவன்தான். இதற்கு நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துங்கள். (குர்ஆன் 16:78)

அல்லாஹ் வாழ்வாதாரம் வழங்க மறுத்துவிட்டான் என்றால் நாம் அழிந்துவிடுவோம். அவனுடைய கருணைதான் மனிதர்களையும் எல்லாப் படைப்புகளையும் உயிர்வாழ வைக்கிறது. அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் பாவங்களில் மிகப் பெரியதைப் பற்றிக் கூறும்போது, அல்லாஹ்வுக்கு இணையாக மற்றதை வணங்குவது என்றார்கள். எனவே, மனிதர்கள்மீது அல்லாஹ்வுக்கு இருக்கும் உரிமை, அவர்கள் அவனைத் தவிர யாரையும் வணங்கக் கூடாது என்பதே.

என்று ஒவ்வொரு பெயரிலும் அவனது பண்பும் அடங்கியுள்ளது. இந்தப் பெயர்களில் அவனது அறிவு, ஞானம், கேள்விப்புலன், பார்வை ஆகிய பண்புகள் உள்ளன. ஆக பெயர்களில் பண்புகளில் அடங்கியிருப்பதால் அவை இரண்டு விசயங்களைக் காட்டுகின்றன. ஆனால், பண்புகள் என்பவை ஒன்றையே காட்டுகின்றன. அவை பெயர்களாக ஆகிவிடாது. நாம் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் கூறியுள்ள எல்லாப் பண்புகளையும் அல்லாஹ்வின் மகிமைக்குத் தக்கவாறு நம்பிக்கைகொள்கிறோம். அவனது உள்ளமை எவ்வாறு அவனது படைப்புகளின் உள்ளமைக்கு ஒப்பாக இருக்காதோ அது போன்றே அவனது பண்புகளும் அவனுடைய படைப்புகளின் பண்புகளுக்கு ஒப்பாகுவதில்லை என்று நம்பிக்கைகொள்கிறோம்.

அல்லாஹ்வின் 99 பெயர்கள்

ஆதாரங்கள்	தமிழ் லிபி	அறபி	எண்
குர்ஆன் 55:1,2	அர்ரஹ்மான்	الرَّحْمَنُ	1
குர்ஆன் 41:2	அர்ரஹீம்	الرَّحِيمُ	2
குர்ஆன் 59:23	அல்மலிக்	المَلِكُ	3
குர்ஆன் 59:23	அல்குத்தூஸ்	القُدُّوسُ	4
குர்ஆன் 59:23	அஸ்ஸலாம்	السَّلامُ	5
குர்ஆன் 59:23	அல்மூஃமின்	المُؤْمِنُ	6
குர்ஆன் 59:23	அல்முஹைமின்	المُهَيْمِنُ	7
குர்ஆன் 59:23	அல்அஸீஸ்	العَزِيزُ	8
குர்ஆன் 59:23	அல்ஜப்பார்	الجَبَّارُ	9
குர்ஆன் 59:23	அல்முத்தகப்பீர்	المُتَكَبِّرُ	10
குர்ஆன் 59:24	அல்காலிக்	الخَالِقُ	11
குர்ஆன் 59:24	அல்பாரீஉ	البَارِئُ	12
குர்ஆன் 59:24	அல்முஸவ்விர்	المُصَوِّرُ	13
குர்ஆன் 57:3	அல்அவ்வல்	الأَوَّلُ	14
குர்ஆன் 57:3	அல்ஆகிர்	الآخِرُ	15
குர்ஆன் 57:3	அள்ளாஹிர்	الظَّاهِرُ	16
குர்ஆன் 57:3	அல்பாத்தின்	البَاطِنُ	17
குர்ஆன் 42:11	அஸ்ஸமீஃ	السَّمِيعُ	18

ஆதாரங்கள்	தமிழ் லிபி	அறபி	எண்
குர்ஆன் 42:11	அல்பசீர்	اَلبَصِيرُ	19
குர்ஆன் 8:40	அல்மவ்லா	اَلمَوْلَى	20
குர்ஆன் 8:40	அந்நசீர்	اَلنَّصِيرُ	21
குர்ஆன் 4:149	அல்அவ்ஃப்	اَلعَفُوُّ	22
குர்ஆன் 4:149	அல்கதீர்	اَلقَدِيرُ	23
குர்ஆன் 67:14	அல்லத்தீஃப்	اَللَّطِيفُ	24
குர்ஆன் 67:14	அல்ஃகபீர்	اَلخَبِيرُ	25
புகாரீ 6410	அல்வித்ர்	اَلوِتْرُ	26
முஸ்லிம் 91	அல்ஜமீல்	اَلجَمِيلُ	27
ஸஹீஹ் அபீதாவூது 4011	அல்ஹய்யு	اَلحَيُّ	28
ஸஹீஹ் அபீதாவூது 4011	அஸ்ஸித்தீரு	اَلسِّتِّيرُ	29
குர்ஆன் 13:9	அல்கபீர்	اَلكَبِيرُ	30
குர்ஆன் 13:9	அல்முத்தஆல்	اَلمُتَعَالُ	31
குர்ஆன் 13:16	அல்வாஹிது	اَلوَاحِدُ	32
குர்ஆன் 13:16	அல்காஹிர்	اَلقَهَّارُ	33
குர்ஆன் 24:25	அல்ஹக்	اَلحَقُّ	34
குர்ஆன் 24:25	அல்முபீன்	اَلمُبِينُ	35
குர்ஆன் 11:66	அல்கவிய்யு	اَلقَوِيُّ	36
குர்ஆன் 51:58	அல்மத்தீன்	اَلمَتِينُ	37
குர்ஆன் 20:111	அல்ஹய்யு	اَلحَيُّ	38
குர்ஆன் 20:111	அல்கய்யூம்	اَلقَيُّومُ	39
குர்ஆன் 42:4	அல்அலீய்யு	اَلعَلِيُّ	40
குர்ஆன் 42:4	அல்அதீம்	اَلعَظِيمُ	41
குர்ஆன் 35:30	அஷ்ஷகூர்	اَلشَّكُورُ	42
குர்ஆன் 2:225	அல்ஹலீம்	اَلحَلِيمُ	43
குர்ஆன் 2:115	அல்வாசிஃ	اَلوَاسِعُ	44
குர்ஆன் 2:115	அல்அலீம்	اَلعَلِيمُ	45
குர்ஆன் 2:37	அத்தவ்வாப்	اَلتَّوابُ	46
குர்ஆன் 2:129	அல்ஹகீம்	اَلحَكِيمُ	47

ஆதாரங்கள்	தமிழ் லிபி	அறபி	எண்
குர்ஆன் 6:133	அல்கனீய்யு	الغَنِيُّ	48
குர்ஆன் 82:6	அல்கரீம்	الكَرِيمُ	49
குர்ஆன் 112:1	அல்அஹது	الأَحَدُ	50
குர்ஆன் 112:2	அஸ்ஸமது	الصَّمَدُ	51
குர்ஆன் 11:61	அல்கரீப்	القَرِيبُ	52
குர்ஆன் 11:61	அல்முஜீப்	المُجِيبُ	53
குர்ஆன் 85:14	அல்கஃபூர்	الغَفُورُ	54
குர்ஆன் 85:14	அல்வதூது	الوَدُودُ	55
குர்ஆன் 42:28	அல்வலிய்யு	الوَلِيُّ	56
குர்ஆன் 42:28	அல்ஹமீது	الحَمِيدُ	57
குர்ஆன் 34:21	அல்ஹஃபீள்	الحَفِيظُ	58
குர்ஆன் 11:73	அல்மஜீது	المَجِيدُ	59
குர்ஆன் 34:26	அல்ஃபத்தாஹ்	الفَتَّاحُ	60
குர்ஆன் 34:47	அஷ்ஷஹீது	الشَّهِيدُ	61
புகாரீ 1120	அல்முகத்திம்	المُقَدِّمُ	62
புகாரீ 1120	அல்முஅக்கிர்	المُؤَخِّرُ	63
குர்ஆன் 54:55	அல்மலீக்	المَلِيكُ	64
குர்ஆன் 54:55	அல்முக்ததீர்	المُقْتَدِرُ	65
அபூ தாவூது 3451, திர்மிதீ 1314, ஸஹீஹ் இப்னு மாஜா 1801	அல்முசஃஇர்	المُسَعِّرُ	66
அபூ தாவூது 3451, திர்மிதீ 1314, ஸஹீஹ் இப்னு மாஜா 1801	அல்காபிள்	القَابِضُ	67
அபூ தாவூது 3451, திர்மிதீ 1314, ஸஹீஹ் இப்னு மாஜா 1801	அல்பாஸித்	البَاسِطُ	68
அபூ தாவூது 3451, திர்மிதீ 1314, ஸஹீஹ் இப்னு மாஜா 1801	அர்ராஸிக்	الرَّازِقُ	69

ஆதாரங்கள்	தமிழ் லிபி	அறபி	எண்
குர்ஆன் 6:18	அல்காஹிர்	القَاهِرُ	70
புகாரீயின் கிதாபுத் தவ்ஹீத், அவர்களுக்கு எந்தப் பரிந்துரையில் இல்லை என்பதின் விளக்கம், 6/2719	அத்தய்யான்	الدَّيَّانُ	71
குர்ஆன் 2:158	அஷ்ஷாகிர்	الشَّاكِرُ	72
ஸஹீஹ் அபீதாவூது 1495	அல்மன்னான்	المَنَّانُ	73
குர்ஆன் 6:65	அல்காதிர்	القَادِرُ	74
குர்ஆன் 36:81	அல்கல்லாக்	الخَلَّاقُ	75
குர்ஆன் 3:26	அல்மாலிக்	المَالِكُ	76
குர்ஆன் 51:58	அர்ரஸ்ஸாக்	الرَّزَّاقُ	77
குர்ஆன் 3:173	அல்வகீல்	الوَكِيلُ	78
குர்ஆன் 5:117	அர்ரகீப்	الرَّقِيبُ	79
ஸஹீஹ் அல்ஜாமிஃ 1824	அல்முஹ்சின்	المُحْسِنُ	80
குர்ஆன் 4:86	அல்ஹசீப்	الحَسِيبُ	81
புகாரீ 5675	அஷ்ஷாஃபீ	الشَّافِي	82
முஸ்லிம் 2593	அர்ரஃபீக்	الرَّفِيقُ	83
புகாரீ 3116	அல்முஃத்தீ	المُعْطِي	84
குர்ஆன் 4:85	அல்முகீத்	المُقِيتُ	85
ஸஹீஹ் அபீதாவூது 4806	அஸ்ஸயித்	السَّيِّدُ	86
முஸ்லிம் கிதாபுஸ்ஸகாத் 1015	அத்தய்யிப்	الطَّيِّبُ	87
ஸஹீஹ் அபீதாவூது 4955	அல்ஹகம்	الحَكَمُ	88
குர்ஆன் 96:3	அல்அக்ரம்	الأَكْرَمُ	89
குர்ஆன் 52:28	அல்பர்ரு	البَرُّ	90
குர்ஆன் 38:66	அல்கஃப்பார்	الغَفَّارُ	91
குர்ஆன் 24:20	அர்ரஊஃப்	الرَّءُوفُ	92
குர்ஆன் 3:8	அல்வஹ்ஹாப்	الوَهَّابُ	93
ஸஹீஹ் அல்ஜாமிஃ 1744	அல்ஜவ்வாத்	الجَوَادُ	94